රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | COMBINED SERVICES DIVISION
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | *Independence Square, Colombo 07, Sri Lanka*

දුරකථනය / தொலைபேசி: **(94) 011- 2694560** Telephone
ෆැක්ස් / தொலைநகல்: **(94) 011- 2692254** Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk** E-mail
වෙබ් අඩවිය / இணையத்தளம்: **www.pubad.gov.lk** Web Site

මගේ අංකය / எனது இல / My No: R/DO/PER.APP/2020
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி: / Date: 2020.06.12

**2018.08.20 ஆம் திகதி பட்டதாரிப் பயிலுநர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட வேலையற்ற பட்டதாரிகளை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு நியமித்தல் மற்றும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 தரம் III இற்கும் வகுப்பு 2 தரம் II இற்கும் நியமித்தல்**

மேற்படி விடயம் தொடர்பில் இந்த அமைச்சின் இணைய தளத்தில் வெளியிடப்பட்ட எனது 2020.03.17 மற்றும் 2020.04.20 ஆம் திகதிய மற்றும் பொது நிருவாகச் செயலாளரின் 2020.05.04 ஆம் திகதிய கடிதங்கள் தொடர்பில் உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

02. அதற்கிணங்க, இது வரையில் கடமைகளைப் பொறுப்பேற்காத உத்தியோகத்தர்கள் 2020.06.17 ஆம் திகதிக்கு முன்னர் நியமனக் கடிதம்/ சேவை நிலையத் திருத்தக் கடிதம் மூலம் கடமையில் இணைக்கப்பட்ட சேவை நிலையங்களில் கடமைகளைப் பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவிப்பதுடன் 2020.06.17 ஆம் திகதியின் பின்னர் கடமைகளைப் பொறுப்பேற்காது தொடர்ந்தும் பயிலுநர்கள் என்ற அடிப்படையில் இருக்கும் உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் மேற்குறித்த திகதியின் பின்னர் கடமைகளைப் பொறுப்பேற்கும் உத்தியோகத்தர்களின் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி தொடர்பிலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்படும் என்பதை பணிவுடன் அறியத் தருகின்றேன்.

03. என்னால் வழங்கப்பட்ட நியமனக் கடிதம் அல்லது சேவை நிலையத் திருத்தக் கடிதம் மூலம் கடமையில் இணைக்கப்பட்ட சேவை நிலையங்களில் ஏற்கனவே கடமைகளைப் பொறுப்பேற்றுள்ள உத்தியோகத்தர்களுக்கு பின்னர் வழங்கப்படும் சேவை நிலையத் திருத்தக் கடிதங்கள் செல்லுபடியற்றவையாகும் என 2020.03.17 மற்றும் 2020.04.20 ஆம் திகதிய கடிதங்களில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு மீண்டும் உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன்.

ஒப்பம்/எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்